பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 12 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- நல்லாட்சி மற்றும் தேச வளர்ச்சியில் அக்கறை கொண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- தொழிலாளர்கள் நலனில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- ஆவின் நிறுவனத்தை நவீன தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தி வருவதாக மாநில பால்வளத் துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.
- தென் மாவட்டங்கள் மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- 19 வயதுக்குபட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி துபாயில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நல்லாட்சி மற்றும் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் தேசிய ஜனநாயகக் கூட்டணி செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமது இல்லத்தில் நேற்று அவர் இரவு விருந்தளித்தார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாநிலங்களின் தேவைகளுக்கு இந்த கூட்டணி முக்கியத்துவம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிப் பயணத்தை வலுப்படுத்த வரும் ஆண்டுகளிலும் இந்த கூட்டணியின் செயல்பாடுகள் தொடரும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தொழிலாளர்கள் நலனில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரியும் 397 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு, பணி நிரந்தர ஆணைகளை மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டியும், இணையமைச்சர் டாக்டர் எல் முருகனும் காணொலி மூலம் வழங்கினர்.

பின்னர் இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் எல். முருகன், கடந்த 4 ஆண்டுகளில் என்எல்சி நிறுவனத்தில் 2 ஆயிரத்து 45 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் நலனில் கவனம் செலுத்தி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டிக்கும், நிரந்தரப் பணி ஆணையைப் பெற்றவர்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

காலத்திற்கு ஏற்ப பல்வேறு மொழிகளை கற்க வேண்டியது அவசியம் என்று தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

பாரதியார் பிறந்த தினத்தையொட்டி, பாரதியார் பிறந்த தினத்தையொட்டி சென்னை மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய மொழிகள் அனைத்துக்கும் தனிச் சிறப்பு உண்டு என்றார்.

மகாகவி பாரதியார், இந்திய மொழிகள் அனைத்தின் மீதும் பற்று கொண்டு இருந்ததாகவும் அதை கருத்தில் கொண்டே, பாரதியாரின் பிறந்ததினத்தை இந்திய மொழிகள் தினமாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்து இருப்பதாகவும் ஆளுநர் கூறினார்.

இந்த நாள் இந்தியாவின் மொழியியல் பாரம்பரியத்தைக் கொண்டாடும் நாளாகவும், ஒற்றுமையை உறுதிப்படுத்தும் நாளாகவும் உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

காசி தமிழ் சங்கமம் நிகழ்வு, மொழிப் பரிமாற்ற முயற்சியாகவும் அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.

இது ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வை வலுப்படுத்துவதாக திரு ஆர்என் ரவி கூறினார்.

<<<<>>>>

ஆவின் நிறுவனத்தை நவீன தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தி வருவதாக மாநில பால்வளத் துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

கோவையில் பால் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான கண்காட்சியை நேற்று அவர் தொடங்கி வைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக கடனுதவிகள் வழங்கப்படுவதாக கூறினார்.

<<<<>>>>

சென்னை கிண்டியில் குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் முதியோர் நல மருத்துவமனை வளாகத்தில் இது அமைக்கப்படும் என்றார்.

480 கோடி ரூபாய் மதிப்பிலான இதன் கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மகளிரணி தலைவர், திருமதி வானதி சீனிவாசன், கல்லூரி வளாகங்களில் கூட பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாகத் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும், இது கவலையளிப்பதாக உள்ளது என்றும் திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின் சரிபார்ப்பு பணிகள் நேற்று தொடங்கின.

விழுப்புரம் மாவட்டத்தில் இதற்கான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரகுமான் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தென் மாவட்டங்கள் மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களின் சில இடங்களில் லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

பிற பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியசை ஒட்டியும், அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியசை ஒட்டியும் பதிவாகக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பல்கேரியாவில் அரசுக்கு எதிரான போராட்டங்களை அடுத்து அந்நாட்டுப் பிரதமர் திரு ரோசன் ஷெல்யாஸ் கோவ் ராஜினாமா செய்துள்ளார்.

<<<<>>>>

மருந்துகள் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் லைபீரியாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

<<<<>>>>

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் திரு டோட் மெக்லேவுடன் மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் புதுதில்லியில் இன்று பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<>>>>

சிஎஸ்ஐஆர் செயல்படுத்தும் மாணவர்கள் - விஞ்ஞானிகள் தொடர்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 14 லட்சம் மாணவர்கள் பயன் அடைந்துள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 99.9 சதவீத பகுதிகளில் 5-ஜி சேவை கிடைப்பதாக தொலைதொடர்புத் துறை இணையமைச்சர் திரு பெம்மசானி சந்திர சேகர் கூறியுள்ளார்.

<<<<>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் உணவுப் பதப்படுத்துதல் துறையில் 9 ஆயிர்தது 200 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு ரவ்னீத் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் 57-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி இன்று கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கவுள்ளார்.

<<<<>>>>

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மண்டல இயக்குநர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் பன்னாரி வனப்பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் உள்ளதால் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செல்லுமாறு வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

<<<<>>>>

அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் தேர்வுக்கான அனுமதிச் சீட்டை தேர்வர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டம் மனையிடத்தை வரைமுறைப்படுத்த 50 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்ற துணை வட்டார வளர்ச்சி அலுவலரை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

சென்னையில் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி செலுத்துதல் மற்றும் உரிமம் வழங்கும் முகாம்கள் இன்று தொடங்கி 3 நாட்களுக்கு 8 இடங்களில் நடைபெறும் என்று மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னையில் கடற்படை சார்பில் நடத்தப்படவுள்ள அரை மாரத்தானை முன்னிட்டு நாளை மறுநாள் அதிகாலை 3 மணிமுதல் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

19 வயதுக்குபட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி துபாயில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் பாகிஸ்தான் - மலேசியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>